# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1993 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

*(1993, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

*1993 நவெம்பர் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்த மானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

# 1993 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழு (திருத்தம்)

[1993, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ. 56/91

## 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1987 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) 18 ஆம் பிரிவின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட ஏதேனும் வேண்டுகோளைப் பரிசோதனை செய்தல்.".

(2) அப்பிரிவின் (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளை விட்டுவிடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (ஆ), (இ), (ஈ), (உ) என்னும் பந்திகளின் கீழான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியின் "பொருள்களைத் தயாரித்தல் அல்லது சேவைகளை ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொருள்களைத் தயாரித்தலில்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (உ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் —

"(உ) பொருள்களைத் தயாரித்தலில் அல்லது பொருள்களைத் தயாரித்தலுடன் தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் திறமையான செயற்பாடு.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, "ஏதேனும் பொருளின் உற்பத்தியாளர்களையும், இறக்குமதியாளர்களையும், விநியோகத்தர்களையும், ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட சேவையை ஏற்பாடு செய்வதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தையும் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தையும் — " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவையேனும் பொருட்களின் விநியோகத்தர்களை—" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. ஒன்பதாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"ஒன்றிணைவு நிலைமையை உருவாக்கக் கூடிய பங்குகளின் கோருகை பற்றிய அறிவிப்பு.

9அ. (1) மூலதனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவின் அல்லது வேறு எவரேனும் ஆளின் எவையேனும் சொத்துக்களைக் கொள்ள உத்தேசிக்கும் ஒவ்வோராளும், அவர் கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, சொல்லப்பட்ட உத்தேசக் கொள்ளலின் தேதிக்கு முன்னர் முப்பது நாட்களுக்குக் குறையாமல் உத்தேசக் கொள்ளல் பற்றிய எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்ற இருபத்தொரு நாட்களுக்குள்ளாக அத்தகைய அறிவித்தல் கொடுத்த ஆளுக்கு —

(அ) பங்குகளின் அல்லது சொத்துக்களின் உத்தேசக் கொள்ளலுக்கு ஆணைக்குழுவிடமிருந்து ஆட்சேபனை எதுவுமில்லை என; அல்லது

(ஆ) இவ்விடயம் தொடர்பாக நுண்ணாய்வொன்றை அல்லது விசாரணையொன்றை நடத்தியபின்னர் ஆணைக்குழு அதன் முடிவைத் தெரிவிக்கும் என,

எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

"ஆணைக்குழு புலனாய்வுகளை நிறைவேற்றுதல்.

11. ஆணைக்குழுவானது, தனது சொந்தப் பிரேரணையின் மீது அல்லது எவரேனும் ஆளினால் அதற்கு விடுக்கப்பட்ட ஒரு முறைப்பாட்டின் அல்லது வேண்டுகோளின் மீது —

(அ) முழுவுரிமை நிலைமையொன்றிருத்தல் அல்லது இருக்கக்கூடிய சாத்தியம்;

(ஆ) ஒன்றிணைவு நிலைமையொன்றை உருவாக்குதல் அல்லது உருவாக்கும் சாத்தியக்கூறு;

(இ) ஏதேனும் போட்டியெதிர்ப்பு வழக்காறு நிலவுதல் தொடர்பாக புலனாய்வொன்றை நிறைவேற்றலாம்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) "பதினோராம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிரிவு 9அ அத்துடன் 11 ஆம் பிரிவின் பந்தி (ஆ) என்னும் பந்தியின் நோக்கத்திற் என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) "மூலதனத்தில் அல்லது சொத்துக்களில் எவையேனும் பங்குகளைப்', என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மூலதனத்தில் எவையேனும் பங்குகளை அல்லது எவையேனும் சொத்துக்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பதினோராம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "9அ என்னும் பிரிவில் அல்லது 11 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு, "18 ஆம் பிரிவின் கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "18 ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1அ) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளெவரும் அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பதினான்கு நாட்களுக்குள்ளாக இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் அல்லது 8 ஆம் பிரிவின்கீழ் தேவைப்பட்டவாறு விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவ அல்லது ஆவணத்தை முன்வைக்கத் தவறுமிடத்து அவர் அதன்பின்னர் ஆணைக்குழுவுக்கு விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட விவரத்திரட்டு அல்லது தகவல் கொடுத்து உதவப்படும்வரை அல்லது ஆவணம் முன்வைக்கப்படும்வரை ஒவ்வொரு நாளுக்கும் ஐந்நூறு ரூபா வீதம் மேலதிக குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவு "இயைபான முகவாண்மை" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாக, பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

> "இயைபான முகவாண்மை" என்பது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொருளின் உற்பத்தியாளர், இறக்குமதியாளர் அல்லது விநியோகத்தர் என்று அல்லது அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பொருளின் விலையை நிர்ணயிப்பதற்குப் பொறுப்பாகவுள்ள வேறெவரேனும் ஆள் என்று பொருளாகும்".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.